மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மறுமுறையும் சொல்கிறேன். என்னிடமுள்ள தகவல்படி அவை வைகை ஆயக்கட்டின் கீழ் வருபவை அல்ல. கிருதமால் நதியிலிருந்து வருகிற கண்மாய்களைச் சேர்ந்தவை என்று தகவல் இருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்து அதைத் தெரிவித்தால் அரசு பரிசீலிக்கும்.

* 266 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ராங்கன் கண்மாயை வைகை ஆயக்கட்டில் சேர்க்கக் கோரி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் அரசிற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: ஏற்கனவே மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டிலிருந்து விடுபட்டுப் போயிருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் அந்தக் கண்மாய்களை வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதியனுப்பினால் அரசு பரிசீலிக்கும்.

Seepage Harnessing Scheme in Bhavani taluk

* 267 *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Seepage Harnessing Scheme at Lower Bhavani Project area கூத்தாடிபாளையம் பள்ளம் திட்டம் in Bhavani taluk is in progress; and

(*b*) if so, the present stage thereof?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அணைக்கட்டு வேலை முடியும் தருவாயில் உள்ளது. வாய்க்கால் வேலை, குறுக்குக் கட்டிடம் கட்டுதல் முதலிய வேலைகள் துவங்கவிருக்கின்றன.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அணைக்கட்டு வேலை முடிவடையும் தருவாயில் இருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். வாய்க்கால் வேலை எப்போது முடிவு அடையும்? அந்த வாய்க்கால் வேலை முடிவானால் எவ்வளவு ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வாய்க்கால் வேலை, குறுக்கே கட்டடம் கட்டும் வேலை நடைபெறுகிறது என்று சொன்னேன். இந்த அணைக்கட்டு மூலம் பலன் அடையும் பூமியின் அளவு 222.50 ஏக்கர்.

குமரி மாவட்டத்தில் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு

***268 வினா—திரு. வீ. கார்த்திசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மழை காலங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருக்கெடுத்து வீணாகப் போய் கடலில் விழும் தண்ணீரைத் தேக்கி, அண்டையிலுள்ள இராதாபுரம் சானலில் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் வேண்டுமென்று அங்கேயுள்ள பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதி. கன்னியாகுமரி மாவட்டத்தில் பழைய ஆற்றில் மழைக் காலத்திலும், மற்ற நாட்களிலும் தண்ணீர் பாழாகிக் கொண்டு போகிறது. ஆகவே அந்தப் பழைய ஆற்றின் குறுக்கே அணை கட்டி, லிப்ட் இர்ரிகேஷன் மூலமாகவாவது இந்த ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் விடும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?